DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 614/2020** |
| Deposition of Witness for | : PW5 |
| Name | :மகேந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25 May 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சென்னிகுளத்தில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரீசனாக வேலை செய்து வருகிறேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். இரண்டாவது கையொப்பம் போட்ட கார்த்திக் என்பவர் எனக்கு தெரியும், அவர் என் மாப்பிளை ஆவர். அதில் என்ன எழுதியுள்ளது என்று

எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுகொண்டதற்கினங்க கையொப்பம் போட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 24.09.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும் எங்கள் தெருவை சார்ந்த கார்த்திக் என்பவரும், மெயின் ரோட்டில் உள்ள சுப்பையாபாண்டி கடை அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த போது, அங்கு வந்த கரிவலம்வந்தநல்லூர் போலிசார் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்பகுதிகளை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சிகளாக கையொப்பம் செய்தேன் கூறிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கில் இருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.